**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 5 August 2020

செய்திக்கொத்து

# மின்னிலக்க நிதிச் சேவைகளுக்கு உதவ புதிய ஆராய்ச்சிக் கழகம்

ஆசியாவில் மின்னிலக்க நிதிச் சேவைகளுக்குத் தேவைப் படும் உதவிகளை வழங்க புதிய ஆராய்ச்சிக்கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட இருக்கிறது. சிங்கப்பூர் நாணய ஆணையம், தேசிய ஆராய்ச்சி அறநிறுவனம், சிங்கப்பூர் தேசிய பல் கலைக்கழகம் ஆகியன இணைந்து உருவாக்கும் இது 'ஆசிய மின்னிலக்க நிதிக் கழகம்' என்ற பெயரில் அமை யும். இவ்வாண்டின் இறுதிவாக்கில் இந்த ஆய்வுக்கழகம் செயல்படத் தொடங்கும் என இம்மூன்று அமைப்புகளும் நேற்று வெளியிட்ட கூட்டறிக்கை தெரிவித்தது.

முனைவர் மட்டத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள தலைசிறந்த மாணவர்களுக்குரிய பட்டமேற்படிப்பு கல்வித் திட்டத்தையும் கல்வி உபகாரச் சம்பள விருதுகளையும் ஆராய்ச்சிக்கழகம் அளிக்கும். இதற்கு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் பொறுப்பாதரவு வழங்கும். முனைவர் பட்டப் படிப்பு முடித்தவர்களுக்கு மின்னிலக்க நிதி மற்றும் நிதித் தொழில்நுட்பம் ஆகியன தொடர்பிலான பயிற்சி களையும் புதிய கழகம் அளிக்கும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.